பசுமை பூமி

கவிதா பிரகாஷ்

நூல் தலைப்பு	:	பசுமை பூமி
ஆசிரியர்	:	கவிதா பிரகாஷ்
மொழி	:	தமிழ்
பதிப்பகம்	:	நிலாச்சாரல் லிமிடட்
காப்புரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பாசிரியர்	:	நிலா
பதிப்பு எண்	:	1.0W
காலம்	:	ஜூன் 2013
அட்டை வடிவமைப்பு	:	பாலாஜி
Wrapper Image Courtesy	:	Kookkai_nak freedigitalphotos.net

“உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்”

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

TERMS OF USE:

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

****

உபயோக நிபந்தனைகள்

- *நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.*
- *நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.*
- *நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.*

****

மின்சார சிக்கனம் தேவை இக்கணம்!

சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளை யாரும் மறந்திருக்க முடியாது. அதே போன்ற பல பேரழிவுகள் பூமி வெப்பமடைதல் மூலமும் ஏற்படலாம். பூமி வெப்பமடைவதற்கு மின்னாற்றலும் ஒரு காரணம்.

சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் நீங்கள் உங்கள் வீட்டில், அலுவலகங்களில் எடுத்துக் கொள்ளும் சில நொடி அக்கறை வெப்ப சுனாமியை சில நிமிடங்கள் தள்ளிப் போடலாம்.

இன்றைய காலகட்டத்தில் மின்சாரத் தேவைகளும் அதிகமாகிவிட்டது. உற்பத்தியும் பற்றாக்குறை ஆகிவிட்டது. அதனால் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய அவசியமும் உருவாகியிருக்கிறது.

மின்சாரத்தை முறையாக உபயோகப்படுத்தும் வழிமுறைகள் இங்கே தொகுத்துத் தருகிறோம். வாருங்கள்.. ஜோதியில் கலப்போம்.

* வெளியில் செல்வதற்கு முன் உங்கள் வீட்டின் ஒவ்வொரு அறையிலும் உள்ள விளக்குகள், தொலைக்காட்சிப் பெட்டி, கணினி, வானொலி, DVD பிளேயர்ஸ், வீடியோ கேம்ஸ் போன்றவற்றை அணைத்து உள்ளீர்களா? என ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

* தேவையற்ற இடங்களில் விளக்குகள், யாரும் பார்க்காமலே ஓடிக் கொண்டிருக்கும் டிவி, கணினி போன்றவற்றை நிறுத்துங்கள்.

வெளியூர் செல்லுகிறீர்கள் என்றால் மேற்கூறிய அனைத்து உபகரணங்களிலும் மின் சப்ளையை நிறுத்த, பிளக்குகளை பிடுங்கிவிட்டு செல்லுங்கள். ஏனெனில் இத்தகைய மின்சாதனங்களில் stand-by என்னும் வசதி உள்ளதால், நீங்கள் சாதனத்தை நிறுத்தியிருந்தாலும் சிறிதளவு மின்சாரத்தை எடுத்துக் கொண்டிருக்கும்.

* ஏசி அல்லது ஹீட்டர் ஓடிக் கொண்டிருக்கும்போது ஜன்னல் மற்றும் கதவுகளை திறப்பதைத் தவிருங்கள்.

* பல் விளக்கும் போதும், சிறு குளியல் போடும் போதும், தண்ணீர் குழாயை மடமடவெனத் திறந்து விடாமல் தேவைப்படும்போது மட்டும் கொஞ்சமாகத் திறந்து கொள்ளுங்கள். தண்ணீர் வீணாகாமலும், தண்ணீரை டேங்க்கில் ஏற்றுவதற்கான மின்சாரத்தையும் மிச்சப்படுத்தலாம்.

* உங்களின் வாட்டர் ஹீட்டர் எவ்வளவு மின்சாரத்தை எடுத்துக் கொள்ளுகிறது எனக் கண்டறியுங்கள். ஒருவேளை மிக அதிக மின்சாரத்தை அது எடுத்துக் கொண்டால், மிகக் குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் வாட்டர் ஹீட்டரை பயன்படுத்துங்கள். வாட்டர் ஹீட்டர் மற்றும் தண்ணீர் வரும் குழாய்களின்

இன்சுலேசனையும் அவ்வப்போது கவனியுங்கள். இரண்டு நாள்களுக்கு மேல் வெளியூர் செல்லுவதாக இருந்தால், வாட்டர் ஹீட்டர் பிளக்கை பிடுங்கிவிட்டுச் செல்லுங்கள்.

* பகல் நேரங்களில் கூட விளக்குகளைப் போடுவதைத் தவிருங்கள். அலங்காரத்திற்காய் சில சிறிய விளக்குகளைப் போடுவதைத் தவிர்த்து, ஒரு பெரிய விளக்கைப் பயன்படுத்துங்கள் .உதாரணமாக இரு 60 வாட்ஸ் பல்பைவிட ஒரு 100 வாட்ஸ் பல்ப் குறைந்த மின்சாரத்தையே எடுத்துக் கொள்ளும்.

* 75% குறைந்த மின்சாரம் தேவைப்படும் புளோரசன்ட் விளக்குகளைப் பயன்படுத்துங்கள். அதிக வெளிச்சம் தேவைப்படாத இடங்களில் மிகக் குறைந்த வாட்ஸ் பல்பை உபயோகியுங்கள். வீட்டின் வெளிப்புறங்களில் பகல் நேரத்தில் விளக்குகளை எரிய விடுவதைத் தவிருங்கள்.

* ஃபிரிட்ஜின் காயில்களை முறையாக சுத்தம் செய்வதை வழக்கமாகக் கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் மின்சார பில் குறைவதுடன், ஃபிரிட்ஜின் வேலைத்திறனும் அதிகரிக்கும். உணவுப் பொருட்களை ஃபிரிட்ஜின் உள்ளே வைப்பதற்கு முன் அறையின் வெப்பநிலைக்கு குளுமையாகும் வரை காத்திருந்து பின் உள்ளே வையுங்கள்.

* அவனில்(oven) ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உணவுகளைத் தயாரியுங்கள். அவன் பயன்பாட்டில் உள்ள போது அதன் கதவுகளை திறந்து திறந்து மூடாதீர்கள். உறைந்த (frozen) உணவு அறை வெப்பநிலைக்கு வரும் வரை வெளியே வைத்து பின் அவன் அல்லது மைக்ரோவேவ் அவனில் பயன்படுத்துங்கள்.

* வாஷிங் மெஷினில் எப்போதும் முழு அளவு துணிகளை குளிர்ந்த நீரில் துவையுங்கள். டிரையரிலும் முழு அளவு துணிகளைக் காய வையுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட முறை காய வைக்க வேண்டி இருந்தால், முதலில் போட்ட துணிகள் காய்ந்தவுடன் அடுத்த முறைக்கான துணியைப் போடுங்கள். டிரையர் சூடாக இருப்பதால் சீக்கிரம் இரண்டாவது முறை போட்ட துணிகள் காய்ந்துவிடும். டிரையரின் லின்ட் பில்டரில் உள்ள அழுக்குகளை அடிக்கடி சுத்தம் செய்யுங்கள். சூரிய ஒளி நன்றாக அடிக்கும் நாட்களில் துணிகளை வெயிலில் உலர்த்துங்கள்.

மேற்கூறியவை அனைத்தும் பொதுவான மின்சாரம் சேமிக்கும் வழிகள். இனி ஒவ்வொரு மின் சாதனத்திலும் எவ்வாறு மின்சாரத்தை சேமிக்கலாமெனப் பார்க்கலாம்.

மின்விசிறி:

சீலிங் ஃபேன் ஒரு இரவு முழுவதும் ஓடினால் 22 யூனிட் மின்சாரத்தை ஒரு மாதத்திற்கு எடுத்துக் கொள்ளும். பலரும் நினைப்பது போல வேகமாக ஒடும் மின்விசிறி அதிக மின்சாரத்தை எடுத்துக் கொள்ளுவதில்லை. குறைந்த வேகத்தில் ஒடும் மின்விசிறியால் ரெகுலேட்டரின் சூடாகி ஆற்றல் வீணாகும். சாதாரண ரெகுலேட்டர் 20 வாட்ஸ் அதிக மின்சாரத்தைக் குறைந்த வேகத்தில் ஓடும் போது

எடுத்துக் கொள்ளும். இதை மின்அணு ரெகுலேட்டரை உபயோகிப்பதால் குறைக்கலாம். பழைய மின்விசிறியில் சத்தம் வரக் காரணம் அதன் மேல்புறத் தட்டு சரியாக பொருத்தப்படாமல் இருந்தாலோ, தவறான இணைப்புகளினாலோ இருக்கலாம். அதை உடனடியாக கவனித்து சரி செய்யுங்கள்.

குளிர்சாதனப் பெட்டி:

வீடுகளில் பயன்படுத்தப்படும் குளிர்சாதனப் பெட்டிகள் பெரும்பான்மையான வீடுகளில் மாதத்திற்கு 30-35 யூனிட் மின்சாரத்தை எடுக்கும். 10 வருடத்திற்கு மேற்பட்ட குளிர்சாதனப் பெட்டி 1.5 மடங்கு அதிக மின்சாரத்தை இழுக்கும். அத்தகைய நிலையில் அதை உடனடியாக மாற்றுங்கள். குளிர்சாதனப் பெட்டியின் கதவை அடிக்கடி திறந்து மூடுவதால் பெட்டியின் உள்புற வெப்பநிலை அதிகரித்து அதிக மின்சாரத்தை எடுக்கும். தேவைப்படும் நேரங்களில் மட்டும் திறந்து மூடுங்கள்.

நடைமுறையில் உபயோகப்படுத்தப்படும் 165 லிட்டருக்குப் பதில் முடிந்தால் சிறிய பெட்டியைப் பயன்படுத்துங்கள். நான்கு நபர்கள் கொண்ட குடும்பத்திற்கு 80லி குளிர்சாதனப் பெட்டியே போதுமானது. குளிர்சாதனப் பெட்டியின் அளவு, மாடலைப் பொறுத்து ஒரு நாளைக்கு 1.2 முதல் 4 யூனிட் வரை மின்சாரத்தை எடுத்துக் கொள்ளும்.

குளிர்சாதனப் பெட்டியை நீங்கள் வைத்திருக்கும் இடத்தைப் பொறுத்தும் அதன் பயன்பாடு மாறுபடும். அடுப்புக்கு அருகிலோ, சூரிய ஒளி நேராகப் படும்படியோ வைப்பதைத் தவிர்த்து வெளிப்புறச் சுவற்றுக்கு அருகில் வையுங்கள். சில இன்ச் இடைவெளி பெட்டியைச் சுற்றி இருக்குமாறு வைப்பதால், காற்றோட்டம் நன்றாக இருக்கும்.

குளிர்சாதனப்பெட்டியின் உள்ளே மற்றும் ஃபிரிசரையும் அடிக்கடி சுத்தம் செய்யுங்கள். ஐஸ் கட்டிகளால் நிரம்பிய ஃபிரிசர் இயங்க அதிக ஆற்றல் தேவைப்படும். அப்பகுதியை சுத்தம் செய்வதால் மின்சாரச் செலவைக் குறைக்கலாம். குளிர் காற்று வெளியேறுவதைத் தடுக்க, பெட்டியின் கதவுகளை அதிக நேரம் திறந்தே வைத்திருப்பதைத் தவிருங்கள். பெட்டியின் சீலையும் (seal) அடிக்கடி பரிசோதியுங்கள். அதன் மூலமும் குளிர்ந்த காற்று வெளியேறலாம்.

சூடான உணவுப் பொருட்களை அப்படியே பெட்டியின் உள்ளே வைப்பதால், அவற்றை குளிர்விக்க அதிக மின்சாரம் செலவாகும். அறை வெப்பநிலைக்கு வந்த பின் பொருட்களை குளிர்சாதனப் பெட்டியில் வையுங்கள்.

அயர்ன் பாக்ஸ்:

ஒரு குடும்பத்திலுள்ள அனைவரும் வாரத்திற்கு ஒருமுறை ஒன்றாக அயர்ன் செய்வதை வழக்கமாக்குங்கள். அதன் மூலம் மின்சாரத்தை மிச்சப்படுத்துவதுடன் உங்களின் நேரமும் மிச்சமாகும்.

டிவி மற்றும் டிவிடி:

டிவியைப் போட்டுவிட்டு வேறு வேலைகளைக் கவனிப்பதைத் தவிர்த்து, நீங்கள் பார்க்கும்போது மட்டும் டிவியை ஆன் செய்யுங்கள். டிவி மற்றும் டிவிடி போன்றவற்றை ரிமோட்டால் நிறுத்தாமல் சுவிட்சையே நிறுத்துங்கள். ரிமோட்டால் நிறுத்தும் போது டிவி முழுமையாக நிறுத்தப்படாமல் stand-by முறையில் இயங்க சிறிது மின்சாரத்தை பயன்படுத்தும். ரிமோட்டால் நிறுத்துவதன் மூலம் 6 வாட்ஸ் மின்சாரத்தை ஒரு மணி நேரத்திற்கும், டிவியிலேயே ஆப் செய்வதால் 0.5 முதல் 1 வாட்ஸ் வரையும் மின்சாரத்தை டிவி பயன்படுத்தும். அதனால் பிளக் பாயிண்டிலேயே டிவியை நிறுத்துங்கள். பிளக்கை பிடுங்க வேண்டிய அவசியம் டிவி, சிடி பிளேயருக்கு இல்லை.

ஒரு நாளைக்கு 10 மணி நேரம் ஓடும் டிவி ஒரு மாதத்திற்கு 30 யூனிட் மின்சாரத்தை எடுத்துக் கொள்ளும். செல்போன், சிடி/டிவிடி, மைக்ரோவேவ் போன்ற உபகரணங்களும் மெயின் சுவிட்சில் நிறுத்தப்படுவதால் தேவையற்ற மின்சாரப் பயன்பாடு தவிர்க்கப்படும்.

வாஷிங் மெஷின்:

ஆடைகளை சிறிய லோடுகளில் துவைப்பதால் நேரமும், மின்னாற்றலும் வீணாகிறது. அதைத் தவிர்க்க மெஷின் நிரம்பும் அளவிற்கு ஆடைகளைத் துவையுங்கள். டிரையரில் போடும் முன் ஆடையில் தண்ணீர் முழுவதும் வடிந்து சற்றே உலர்ந்த நிலையில் இருக்கிறதா.. என பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

விளக்குகள்:

ஒரு கட்டிடத்தின் மின்சாரப் பயன்பாட்டில் 20% விளக்குகளுக்கு செலவாகிறது. முடிந்தளவு பகல் நேர வெளிச்சத்தையும், இரவில் லெட் லைட்டுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த அளவைக் குறைக்கலாம். உபயோகத்தில் இல்லாத போது விளக்குகள், மின்விசிறி, கொசுவர்த்தி மேட் போன்றவற்றை சுவிட்ச் ஆப் செய்வது மிக முக்கியம். ஒரு மணி நேரம் எரிவதற்கு 5 வாட்ஸ் மின்சாரத்தை கொசுவர்த்தி மேட் எடுத்துக் கொள்ளுகிறது. Thermostat நிலையில் இருக்கும் போது 1-1.5 யூனிட் மின்சாரம் செலவாகிறது.

LED எனப்படும் ஒளி உமிழும் விளக்குகளை இரவு நேரங்களில் பயன்படுத்துங்கள். குறைந்த ஒளி உமிழும் LED விளக்குகளை பயன்படுத்தி முக்கியமான பெரிய விளக்குகளின் பயன்பாட்டைக் குறையுங்கள்.

நம் தினசரி வாழ்க்கையில் சில கட்டுப்பாடுகளை விதித்து கடைபிடிப்பதன் மூலம் அதிகளவில் மின்னாற்றலை சேமிக்க முடியும். உதாரணமாக சில மணி நேரம் வெளியில் செல்லுகையில் கணினியை நிறுத்தி விடுதல், உபயோகிக்காதபோது கணினித் திரையை நிறுத்துதல் போன்றவற்றின் மூலம் மின்சாரம் மற்றும் பணம் மட்டும் சேமிக்கப்படுவதில்லை, சுற்றுச் சூழல் மாசுபாடு குறைகிறது.

ஏ/சி:

உங்கள் அறையின் அளவு மற்றும் அதிலுள்ள பொருட்கள், மனிதர்களைப் பொறுத்து ஏசியின் மின்சாரப் பயன்பாடு இருக்கும். 1.5 டன் ஏசி ஒரு மணி நேரத்திற்கு 2-2.5 யூனிட் மின்சாரத்தை எடுத்துக் கொள்ளும்.

ஏசியிலுள்ள ஏர் ஹோல்கள் ஹெர்மேடிக்கல் சீல்ட் ஆப் (hermetically sealed off) செய்யப்படுவதால் அதன் மின்சாரப் பயன்பாடு குறையும். மிகச் சிறந்த பாதுகாப்பு உறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் மின்சாரச் செலவைக் குறைக்கலாம். குறிப்பாக அறையின் மேற்கூரை முழுவதும் பாதுகாப்பு உறை போடுவதால் குளிரூட்டியின் வேலைத் திறன் அதிகரிக்கும். வெப்பநிலையைக் கட்டுப்படுத்த சரியான தெர்மோஸ்டாட் (thermostat) பயன்படுத்துதல் அவசியம். இல்லையென்றால் ஆற்றல் விரயமாகும்.

முடிந்தளவு சீலிங் பேனை பயன்படுத்துதல் ஏசி பயன்பாட்டினைக் குறைக்க எளிய வழி. ஏசிக்கு பத்து ரூபாய் செலவாகிறதென்றால், மின்விசிறிக்கு முப்பது பைசா மட்டுமே செலவாகும். மின்விசிறியின் விசிறிகள் உலோகமாக இருக்கும் பட்சத்தில் 20% மின்னாற்றல் சேமிக்கப்படும்.

ஏசி மட்டும்தான் உங்களிடம் இருக்கிறதா? அப்படியெனில் 22 டிகிரிக்கு மேல் அமைக்கப்படும் ஒவ்வொரு வெப்பநிலையும் 3-5% குறைந்த மின்னாற்றலை எடுத்துக் கொள்ளும். 25 டிகிரி செல்சியஸ் என அமைப்பதன் மூலம் மின்னாற்றல் மற்றும் உங்கள் பணத்தை மிச்சப்படுத்தலாம்.

உங்களின் புதிய அலுவலகத்தில் சென்ரலைஸ்டு (Centralised) ஏசியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து தேவைப்படும் இடங்களில் மட்டும் பயன்படும் வகையில் ஸ்பிலிட் ஏசி முறையைப் பயன்படுத்துங்கள். அலுவலகம் முழுவதும் ஏசி பயன்படுத்தப்படாமலும், வேலை நேரம் முடிந்தவுடன் ஏசியின் பயன்பாடு நிறுத்தப்படவும் உதவும் இந்த ஏற்பாடு. ஏசியின் பில்டரை சுத்தமாக வைத்துக் கொள்ளுவதால் மின்சாரச் செலவை குறைக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட கோட்டிங் முறையை ஜன்னலில் பயன்படுத்துவதால் குளிர்காற்று வெளியேறுவதைத் தடுக்கலாம். கதவு, ஜன்னல்களில் weather strips பயன்பாட்டால் காற்றுக் கசிவைத் தவிர்க்கலாம். பல கோட்டிங் கொடுக்கப்பட்ட கண்ணாடி ஜன்னலைப் பயன்படுத்துவதால் ஏசியின் பயன்பாடு 40% குறையும்.

கீரின் மெஷெஸ் எனப்படும் சூரிய ஒளியைத் தடுக்கும் ஜன்னல் மற்றும் கதவுகளை அமைப்பதன் மூலம் நேரடியாக சூரிய ஒளி அதிக நேரம் உங்கள் வீட்டினுள் வருவதைத் தவிர்க்கலாம். அதன் மூலம் ஏசியின் பயன்பாடு குறையும். குளிர்காலங்களில் இத்தகைய ஜன்னல் மற்றும் கதவை எளிதில் கழற்ற முடிவதால் காலை நேரக் குளிரைக் குறைக்கவும், அதன் மூலம் ஹீட்டரின் பயன்பாட்டைக் குறைக்கவும் அது உதவும். டிரிப் ஈரிகேஷன்(drip irrigation) முறையின் மூலம் காற்றின் ஈரப்பதம் அதிகரிக்கையில் வெப்பத்தைக் குறைக்க முடியும். பெரிய தொழில் நிறுவனங்களில் இத்தகைய முறை கடைபிடிக்கப்படுகிறது.

விளக்கு:

மடிக்கணினி உபயோகிக்கும் போது அதிக வெளிச்சம் தேவைப்படாததால் 40W, 60W விளக்குகளுக்குப் பதில் USB(5 V DC) விளக்குகளைப் பயன்படுத்தலாம்.

இரவு விளக்குகளுக்கு 0 W or LED விளக்குகளைப் பயன்படுத்தலாம்.

சூரிய ஒளி நேரடியாக படும் விதத்தில் உள்ள சுவர்களுக்கு மென்மையான நிறங்களால் வர்ணம் பூசுவதால் சூரிய ஒளியை எதிரொளிக்கச் செய்து செயற்கை விளக்குகளின் பயன்பாட்டைக் குறைக்கலாம்.

கணினி:

ஃபொதுவாக கணினி தன் இயக்கத்திற்கு அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவதில்லை. கணினித் திரையே அதிக மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறது. பாட்டுப் பிரியர்கள் மணிக்கணக்கில் மல்டிமீடியா கணினியில் பாட்டு கேட்டுக் கொண்டே தூங்குவதற்கு பதில் கணினித் தி¨ரையை மட்டும் சுவிட்ச் ஆப் செய்துவிட்டோ,10 நிமிடத்திற்கு கணினி பயன்படுத்தப்படவில்லையெனில் தானே நின்று விடுமாறு அமைத்துக் கொள்ளலாம்.

- நீங்கள் கணினியை ஒரு நாளைக்கு ஓரிரு மணி நேரமே பயன்படுத்துகிறீர்கள் என்றால் UPSக்குப் போகும் மின்னிணைப்பை இரவு முழுவதும் நிறுத்தி வைக்கலாம். UPS மட்டும் ஒரு மணி நேரத்திற்கு 9 -15 வாட்ஸ் மின்சாரத்தை எடுத்துக் கொள்ளும்.

- எங்கேல்லாம் LCD திரையைப் பயன்படுத்த முடியுமோ அதைப் பயன்படுத்தி CRT(Cathode Ray Tubes) பயன்பாட்டைக் குறையுங்கள். கேம்ஸ் ஆர்வம் இல்லாதவர்கள் கிராபிக்ஸ் கார்டை கணினியில் பொருத்துவதைத் தவிருங்கள். குறிப்பாக திரவம் மூலம் குளிரூட்டப்படும் கணினியைத் தவிருங்கள்.

- தேவையில்லாத சேமிக்கும் கருவிகளாகிய ஃபிளாப்பி, பிளாஷ் டிரைவ் போன்றவற்றை கணினியிலிருந்து எடுத்து விடுங்கள்.

- கணினி stand by ல் இருக்கும் போது பயன்படுத்தப்படவில்லை எனில் automatic shut down முறையை செட் பண்ணுங்கள்.

- இரவு நேரங்களில் பெரிய ஃபைல்களை தரவிறக்கம் செய்யும் போது கணினித் திரையை மட்டும் turn-off செய்யுங்கள்.

- மடிக் கணினியின் பின்புற வெளிச்சத்தின் luminance அளவைக் குறைத்து வைப்பதால் மின்னாற்றல் சேமிக்கப்படும்.

- வயர்லெஸ் நெட்வொர்க் உங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் மட்டும் ஆன் செய்து மற்ற நேரங்களில் turn-off செய்து வையுங்கள்.

- ஒவ்வொரு முறை நீங்கள் மடிக்கணினியை சார்ஜ் செய்யும் போதும் உங்களின் AC Power card தொடக்கத்திலிருந்து சார்ஜ் ஆகும். சார்ஜ் முழுவதும் முடிந்தபிறகு கணினியை சார்ஜ் செய்யுங்கள்.

- கிரா∴பிக்ஸ் மூலம் அதிகளவில் கேம்ஸ் விளையாடுவதில்லையெனில் டூல்ஸ் மூலம் integrated graphics முறையை பயன்படுத்துங்கள்.

- Power options - ல் balanced mode பயன்படுத்துவதால் processor வேலைத்திறன் அதிகரிக்கும்.

- உங்களின் மடிக்கணினியை வெப்பமற்ற பகுதியில் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். முறையற்ற வெப்பம் மூலம் கணினியின் குளிரூட்டும் விசிறி அதிகம் சுற்றுவதால் அதிக ஆற்றல் செலவாகும்.

செல்லிடப்பேசி:

- செல்போன் சார்ஜர் ஒரு மணி நேரத்திற்கு 3 வாட்ஸ் மின்சாரத்தை பிளக்கில் இணைக்கப்பட்டுள்ளபோது பயன்படுத்தும். நடைமுறையில் செல் சார்ஜ் ஆகிவிட்டாலும் நாம் அதன் மின்னிணைப்பை நிறுத்துவதில்லை. அதை தவிர்ப்பதால் 3 வாட்ஸ் மின்சாரம் சேமிக்கப்படும்

- செல்போனை வீட்டில் சார்ஜ் செய்வதற்கு பதில் முடிந்தளவு உங்களின் காரிலேயே சார்ஜ் செய்யுங்கள்.

- இரவு முழுவதும் செல்போனை சார்ஜ் செய்வதால் ∴போனிற்கும் கேடு, போனஸாய் மின்சாரமும் வீணாகும். எனவே அதைத் தவிருங்கள்.

கணினி உபயோகிக்கும் போது உங்களின் ∴போனையும் USB port- ல் சார்ஜ் செய்யுங்கள். இதன் மூலம் கணினியின் PSU மூலம் வீணாகும் மின்சாரத்தை சேமிக்கலாம்.

மின்சார இழப்பு:

வீட்டு உபயோகத்தில் இரண்டாவது அதிக மின்சார இழப்பு மின் கசிவால் ஏற்படுகிறது. பழைய ஒயரிங், பாதுகாப்பற்ற இன்சுலேஷன், கான்கீரிட் மற்றும் டைல்ஸ் தளங்கள் போன்றவை மின்சாரம் எளிதில் கசிய வழிவகுக்கும். ELCB (Earth Leakage Circuit breaker) எனப்படும் கருவியைப் பயன்படுத்தி வீட்டில் எங்கு மின்கசிவு உள்ளது என்பதை மின்னியல் பொறியாளரால் எளிதில் கண்டறிய முடியும்.

சுருங்கச் சொல்லுவதனால், தேவையில்லாத இடங்களில் மின்சாரச் செலவு, பழைய அழுக்கடைந்த நிறுத்தப்படாத விளக்குகள், பழைய குளிர்சாதனப் பெட்டி, ஆள் இல்லாமலே ஓடிக் கொண்டிருக்கும் மின்விசிறி, தொலைக்காட்சி போன்றவையே மின்சாரத் தட்டுப்பாட்டிற்கான மூலங்கள்.

உங்கள் வீட்டிலேயே உள்ள எனர்ஜி மீட்டர் மூலம் ஒரு நாளில் எப்போது அதிக மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது என கண்டறிந்து அந்நேரப் பயன்பாட்டைக் குறைக்கலாம்.

மாற்றுவழிகள்:

மின்சாரம் பயன்படுத்தி செய்யப்படும் வேலைகளுக்கு மாற்று வழிகளைப் பயன்படுத்துவதும் சிறந்த வழியே. அதாவது மின்சாரத்தால் தண்ணீரை சூடாக்குவதற்கு பதில் சோலார் முறையிலோ, கேஸ் மூலமாகவோ தண்ணீரை சூடாக்கலாம். கணினியில் நீங்கள் செலவழிக்கும் நேரத்தை குறைப்பதன் மூலமும், குளிர்காலங்களில், குளிரும் இரவுகளில் குளிர்சாதனப் பெட்டியை நிறுத்துவதன் மூலமும் மின்சாரத்தை மிச்சப்படுத்தலாம்.

பொதுவான மின் சிக்கன முறைகள்:

- இசையை மட்டும் கேட்கும் போது ஸ்பீக்கரில் போட்டு பக்கத்து வீட்டுக்காரரை வம்பிழுக்காமல் ஸ்டீரியோவில் (stereo) கேளுங்கள்.
- வீட்டிலுள்ள டிவி, ரேடியோ, பிரிண்டர், ஸ்கேனர், ஸ்பீக்கர் போன்றவற்றை stand by mode- ல் வைக்காமல் முழுவதுமாய் மின்னிணைப்பைத் துண்டியுங்கள்.
- உங்களின் மாத மின்சாரச் செலவை பரிசோதித்து, மின்சாரப் பயன்பாட்டை முடிந்தளவு குறைப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
- மின்விசிறிகளில் மின்னணு ரெகுலேட்டரை உபயோகியுங்கள்
- விளக்குகளில் 40 W டியூப் ¨லைட்டிற்கு பதில் 36 W மென்விளக்கைப் பயன்படுத்துங்கள்.
- ஆடைகளை உலர்த்துவதற்கு விளக்கு பொருத்திகளையோ, ஒயரையோ பயன்படுத்தாதீர்கள்.
- ஃப்யூஸ் போன விளக்கை மின் இணைப்பைத் துண்டித்த பின் மாற்றுங்கள்.
- மின் விளக்குகளின் பயன்பாட்டைக் குறைக்க, சுவர்களுக்கு லைட் கலர் வர்ணம் பூசுங்கள்.
- வாஷிங் மெஷின் மற்றும் டிரையரில் அதிகளவு மற்றும் குறைந்த அளவு ஆடைகளை போடுவதை விடுத்து எப்போதும் முழுமையான அளவு ஆடைகளையே துவைத்து உலர்த்துங்கள்.
- கணினியில் எந்தவிதமான ஸ்க்ரீன் சேவர்ஸையும் பயன்படுத்தாமல் sleep mode பயன்படுத்துவதன் மூலம் 75% மின்சாரப் பயன்பாடு குறைக்கப்படும்.
- குளிர்சாதனப் பெட்டியில் அளவுக்கு அதிகமாக பொருட்களை அடைக்காமலும், காற்றோட்டமாக இருக்கும்படியும் பார்த்துக் கொள்ளுங்கள்.
- மூடாமல் எந்தவொரு உணவையும் குளிர்சாதப் பெட்டியில் வைக்காதீர்கள். அதனால் கம்பரஸரின் வேலைத்திறன் குறையாமல் இருக்கும்.
- ஒரு வேளைக்கு தேவையான காய்கறிகள், இறைச்சி போன்றவற்றை ஒரே முறையில் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுங்கள்.
- உங்கள் வாட்டர் ஹீட்டரை 50 - 60 deg C -க்குள் ¨வைப்பதன் மூலம் தண்ணீர் சூடாக்கும் மின்சாரச் செலவை 10% குறைக்கலாம்.

- டிஷ்வாஷரில் ஒருவேளை temperature booster இல்லையென்றால் 60 deg C பயன்படுத்துங்கள்.
- வருடத்திற்கு ஒருமுறை ஒரு பக்கெட் தண்ணீரை ஹீட்டருக்கு அடியில் ஊற்றுவதால் அதன் அடிப்புற அழுக்குகள் நீக்கப்பட்டு செயல்திறன் அதிகரிக்கும்.
- ஹீட்டருக்கும் அத்தண்ணீரை தரும் குழாய்க்கும் உள்ள தொலைவு குறைவாக இருந்தால், பைப்பின் வழியே சூடு வெளியேறுவதைத் தடுக்கலாம்.
- சுடுதண்ணீர் வரும் குழாயை முறையாக உறை போட்டுப் பாதுகாப்பது நல்லது
- அறையின் மூலையில் சுவர்களுக்கு அருகே விளக்குகளைப் பொருத்துவதன் மூலம் வெளிச்சம் அறையின் இரு சுவர்களிலும் பட்டு எதிரொளிக்கும்.
- உங்களுக்குத் தேவையான அளவிற்கு மட்டும் தண்ணீரை சூடாக்குங்கள். அது டீ குடிக்கவோ, குளிக்கவோ எதற்காயினும்.

மின்வெட்டு இருக்கும் போது மட்டும் பிள்ளைகள், அக்கம் பக்கத்தாருடன் அரட்டை, பூங்கா போன்ற வெளியிடங்களுக்கு செல்லுவதை விடுத்து, தினமும் அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உறவுகள் செழிப்பதுடன், மின்சாரத்தையும் மிச்சப்படுத்தி நாம் வாழ்வதற்கு இருக்கும் ஒரேயொரு பூமியையும் நலமுடன் வாழ வைக்கலாம். வெப்ப சுனாமியை வீழ்த்த உங்களால் முடிந்தளவு மின்சார சேமிப்பை செயல்படுத்துவதுடன், தெரிந்தவர்களுக்கெல்லாம் சொல்லுங்கள்.

◆◆◆◆◆◆◆◆◆

நீர் வளம் காப்போம்!

"ஆழி சூழ் உலகு" என்பதற்கேற்ப இவ்வுலகில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீரால் சூழப்பட்டுள்ளது. மனிதனின் உடலிலும் சுமார் 75% நீர்தான். நம் உணவில் உள்ள சத்துகளை தேவையான உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லவும் கழிவை கழிவு உறுப்புகளுக்கு அனுப்பவும் நீர் அவசியம். அதே போல் நம் சுற்றுப்புறம் தூய்மையுடன் அமையவும் நீர் இன்றியமையாதது.

ஒரு மனிதனின் உடலில் 42லி தண்ணீர் உள்ளது. அதில் 2.7லி என்னும் மிகச் சிறிய அளவு குறைந்தாலும் டிஹைஹரேஷன், உடலில் எரிச்சல், நடுக்கம், தலைவலி, மயக்கம் போன்றவை ஏற்படும். நீர் என்னும் அமுதம் பெரும்பாலான பொருட்களின் தயாரிப்பில் மிக முக்கிய மூலப்பொருள். மூன்றாம் உலகப் போர் ஏற்படுவதாக இருந்தால் அது தண்ணீருக்காகதான் இருக்கும் என்னும் அளவிற்கு அதன் தேவையோ அதிகம்; கையிருப்போ குறைந்து கொண்டே போகிறது. நம் அன்றாட வாழ்வில் தண்ணீர் எவ்வாறெல்லாம் வீணாகிறது, அதை எவ்வாறு சேமிக்கலாமெனப் பார்ப்போம்.

நீர் சேமிப்புக்கு நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் உங்கள் வாழ்நாளில் சில மணிநேரங்களை அதிகரித்துக் கொள்கிறீர்கள். உணவில்லாமல் ஒரு வாரம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் தண்ணீர் இல்லாமல் ஒரு மணி நேரம் கூட இருக்க முடியாது. ஒரு கிராம் தங்கத்தைவிட ஒரு மிடறு தண்ணீரின் மதிப்பு அதிகம் என்பது தாகம் கொண்ட மனிதனுக்குத் தெரியும். நீர் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உலகம் வெப்பமயமாவதையும் குறைக்க முடியும்.

நீர் சேமிப்பு முறை என்பது ஏதோ மரம் நடு விழா என்பது போல் வருடத்திற்கு ஒரு சிலநாட்கள் செய்ய வேண்டிய செயல் அல்ல. இன்றைய பெருகிவரும் மக்கள்தொகையில் நீர் சேமிப்பு முறைகளை ஒவ்வொரு விநாடியும் கடைப்பிடிக்க வேண்டிய அவசரத்தில் அனைவருமே உள்ளோம். நீங்கள் இருக்கும் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாவிட்டாலும் நாளைக்கே பற்றாக்குறை வரலாம்.

வருமுன் காப்பதே சாலச் சிறந்தது. உங்களின் சிறு கவனமும் சில லிட்டர் தண்ணீரை சேமிக்கலாம். சேமிப்பு முறைகளைத் தொகுத்துத் தர நாங்க ரெடி! தொடர்ந்து பின்பற்ற நீங்க ரெடியா?

இல்லத்தில்:

1. சமையலறையிலோ, குளியலறையிலோ தண்ணீர்க் குழாயிலிருந்து நீர் கசியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

2. உங்களுக்குத் தேவையான அளவு மட்டுமே தண்ணீரை உபயோகியுங்கள்.

3. மறக்காமல் பயன்படுத்தியதும் குழாயை நிறுத்துங்கள்.

4. குழாயில் நீர்க் கசிவு இருப்பின் பிளம்பரை அழைத்து வந்து உடனே சரி செய்யுங்கள்.

5. கூல் டிரிங்ஸ் தேடி ஓடாமல் உங்களின் குடி தண்ணீரையே குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் குடியுங்கள்.

6. உங்களின் நீர் உபயோக பில்லை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் எங்கு, எப்படி தண்ணீர் வீணாகிறது எனக் கண்டறிந்து அதைத் தடுக்க முடியும்.

7. பயன்பாட்டுக்குப் பின்னர் தண்ணீர்க் குழாய்களை நன்கு மூட குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள்.

8. தண்ணீர்துப்பாக்கி போன்ற தண்ணீரை வீணாக்கும் பொம்மைகளை உங்கள் குழந்தைகளுக்கு வாங்குவதைத் தவிருங்கள்.

9. மழையின் போது தானியங்கி தண்ணீர் வழங்கும் உங்களின் சாதனத்தை நிறுத்தி வைக்கும் முறைகளை அறிந்து கொள்ளுங்கள்.

10. சுற்றுலா, வெளியூர்ப் பயணம் ஆகியவற்றின் போது மறக்காமல் உங்களின் வாட்டர் ஹீட்டரை நிறுத்தி விட்டுச் செல்லுங்கள்.

11. தண்ணீரைப் பயன்படுத்தாத போது உங்களின் வாட்டர் மீட்டரைப் பாருங்கள். அதன் முள்ளில் அசைவிருந்தால் உங்கள் வீட்டில் நீர்க் கசிவு உள்ளதாக அர்த்தம்.

12. தண்ணீர் பயன்படுத்தாத போது கிணற்றில் உள்ள பம்ப் அவ்வப்போது மேலேறி கீழிறங்கினால் உங்கள் கிணற்றிலும் நீர்கசிவு உள்ளதாக அர்த்தம்.

13. புதிதாக வீடோ, குளியலறையோ அமைக்கும் போது குறைந்த அளவு தண்ணீரை எடுத்துக் கொள்ளும் டாய்லெட்டை அமையுங்கள்.

குளியலறையில்:

1. பல் துலக்கும் போதும், முகச் சவரம் செய்யும் போதும் தண்ணீர்க் குழாயை திறந்து விட்டுச் செய்யாமல் தேவைப்படும் போது மட்டும் பயன்படுத்துங்கள்.

2. ஷவரின் துளைகள் சிறிய அளவில் இருக்குமாறு அமைத்துக் குளிக்கும் போது அதிக நீர் செலவாவதைக் கட்டுப்படுத்துங்கள்.

3. டாய்லெட்டில் நீர்கசிவு உள்ளதா என அவ்வப்போது பரிசோதியுங்கள்.

4. தேவையில்லாமல் டாய்லெட்டில் டிஷ்யூ, சிகரெட் போன்றவற்றைப் போட்டுத் தண்ணீரை வெளியேற்றுவதைத் தவிருங்கள்.

5. குற்றால அருவியில் குளிப்பதாய் நினைத்துக் கொண்டு ஷவரில் தண்ணீரை திறந்து விடாமல் குளிப்பதற்குக் குறைந்த அளவு தண்ணீரையே பயன்படுத்துங்கள்.

6. உங்களின் பழைய குளியலறை, டாய்லெட் போன்றவற்றைக் குறைவான நீரை பயன்படுத்தும்படியான புதிய முறைகளில் மாற்றி அமையுங்கள்.

7. டாய்லெட்டின் flapper சரியாக வேலை செய்கிறதா என அடிக்கடி பரிசோதியுங்கள்.

8. குழந்தைகளை உங்களுடனே குளிக்க வைக்கும் போது தண்ணீர் பயன்பாடு குறைக்கப்படும்.

9. நீங்கள் தலைக்குக் குளிக்கும் போது ஷாம்பூ தேய்க்கும் போது ஷவரை மூடிவிடுங்கள்.

10. ஹோட்டல் அறையில் தங்கியிருக்கும் போதும், வீடுகளிலும் ஒருமுறை பயன்படுத்திய துண்டுகளைத் துவைக்கப் போடாமல் ஒரு சில முறைகள் பயன்படுத்துங்கள்.

11. ஷவரில் சுடுதண்ணீர் வரும் வரை திறந்துவிடும் தண்ணீரை ஒரு பக்கெட்டில் பிடித்து டாய்லெட்டுக்கும், செடிகளுக்கும் பயன்படுத்துங்கள்.

12. கைகழுவும் போது மடமடவென தண்ணீரை திற்ந்து விட்டு வீணாக்காதீர்கள்.

துணி துவைக்கும் போது:

1. மிகக் குறைந்தளவு தண்ணீரைப் பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளும் வாஷிங் மெஷினை பயன்படுத்துங்கள்.

2. குழாயைத் திறந்து விட்டுவிட்டு துணிகளை அலசாமல் ஒரு பக்கெட்டில் நீரைப் பிடித்து வைத்து அலசுங்கள்.

3. முழு அளவு துணிகள் சேர்ந்த பின்பே அவற்றை வாஷிங் மெஷினில் துவையுங்கள்.

சமையலறையில்:

1. பாத்திரங்களைத் துலக்கும் போதும் குழாயைத் திறந்துவிட்டு தண்ணீரை வீணாக்காதீர்.

2. பழங்கள், காய்கறிகள் கழுவப் பயன்படுத்திய தண்ணீரை பூந்தொட்டிகள், அலங்கார செடிகளுக்கு பயன்படுத்தலாம்.

3. பள்ளிக்கும், அலுவலகத்திற்கும் எடுத்துச் சென்ற தண்ணீர் மீதமிருந்தால் கீழே ஊற்றாமல் செடிகளுக்கு ஊற்றுங்கள்.

4. பாத்திரங்களை கழுவும் போது ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை நிரப்பி அதிலிருந்து தண்ணீரை அள்ளி கழுவும் போது குறைவான அளவு நீரே செலவாகும்.

5. முழு அளவு பாத்திரங்களையே எப்போதும் டிஷ்வாஷரில் பயன்படுத்துங்கள்.

6. பதப்படுத்த, குளிர்விக்கப்பட்ட பொருட்களை அறை வெப்பநிலைக்கு கொண்டு வரத் தண்ணீர்க் குழாயில் பிடிக்காமல், மைக்ரோவேவில் சூடேற்றி பயன்படுத்துங்கள்.

7. குழாயைத் திறந்துவிட்டு கழுவுவதற்குப் பதில் ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பி ஒரே சமயத்தில் பழங்கள், காய்கறிகளை கழுவுங்கள்.

8. உடனடியாக சுடுநீர் தரும் வாட்டர்ஹீட்டரை பயன்படுத்துவதன் மூலம் மின்சக்தியையும், தண்ணீரையும் சேமிக்கலாம்.

9. ஒரு பக்க சிங்கில் சோப்பு நீரை நிரப்பி அதில் பாத்திரங்களை போடுவதன் மூலம் எல்லா பாத்திரத்திலும் குறைவான அளவு சோப்பே படும், அதை கழுவுவதற்க்கும் குறைவான நீரே தேவைப்படும்.

10. ஐஸ்கட்டிகளைத் தெரியாமல் தவறவிட்டுவிட்டால் அவற்றை வீணாக்காமல் செடிகளுக்கு தண்ணீருக்குப் பதில் ஐஸைக் கொடுங்கள்.

11. தொங்கும் பூந்தொட்டிகளுக்கு தண்ணீருக்குப் பதில் ஐஸ் கட்டிகளை பயன்படுத்துவதன் மூலம் அதிகமான தண்ணீர் வீணே கீழே கொட்டுவதைத் தவிர்க்கலாம்.

12. தண்ணீர் வரும் குழாய்களுக்குச் சரியான இன்சுலேஷன் பயன்படுத்துவதன் மூலம் சுடுதண்ணீர் வேகமாக வர வழி செய்து, நீர் வீணாவதைத் தடுக்கலாம்

13. மீன் தொட்டியைச் சுத்தம் செய்யும் போது தொட்டியிலிருந்த நீரை செடிகளுக்குப் பயன்படுத்தலாம்.

வீட்டிற்கு வெளியில்:

1. புல்தரைக்கு தேவைப்படும் போது மட்டும் தண்ணீர் பாய்ச்சுங்கள்.

2. கார், வீட்டின் வெளிப்புற நடை பாதையை முதலில் பெருக்கிக் குப்பைகளை அகற்றி விட்டுப் பின் நீர் பயன்படுத்தினால் குறைவான அளவே தண்ணீர் செலவாகும்.

3. மிகப்பெரிய புல்தரைகளுக்கு ஸ்பிரிங்ளர் மூலம் தண்ணீர் பாய்ச்சுங்கள்.

4. செடிகளுக்குத் தேவையான அளவு நீரை அதிக நாட்கள் இடைவெளியில் தருவதால் வேர் நன்கு வளர்வதுடன், நீரும் மிச்சப்படுத்தப்படும்.

5. ஒரே அளவு நீர் தேவைப்படும் செடிகளை ஒரு குழுவாக அமைப்பதன் மூலம் தண்ணீரைச் சேமிக்கலாம்.

5. தெறிப்பது போன்ற செயற்கை நீர்விழ்ச்சியை விட சலசலத்துக் கொண்டு செல்லும் நீர்விழ்ச்சி குறைந்தளவே நீரை ஆவியாக்கும்.

6. நீரை மறுசுழற்சி செய்யும் கடைகளில் உங்களின் காரை கழுவுங்கள்.

7. உங்கள் வீட்டுப் புல்தரையின் மீது காரை நிறுத்தி கழுவுவதன் மூலம் புல்தரைக்கென தனியே நீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

8. செடியின் தரையை ஒட்டிய கிளைகளை வெட்டாமல் இருப்பதன் மூலம் நீர் ஆவியாவது தடுக்கப்படும். அட! அதுதாங்க உயிர் மூடாக்குன்னு விவசாயிங்க சொல்றது.

9. நிலம் நீரை உறிஞ்சும் தன்மைக்கேற்ப தண்ணீர் பாய்ச்சுங்கள்.

10. வருடத்திற்கு ஒருமுறையாவது புல்தரையை கொத்திவிட்டு களை எடுப்பதன் மூலம் நீர் மேற்பரப்பிலேயே தங்காமல் வேருக்ச் செல்லும்.

11. நிலத்திலிருந்து குறைந்த உயரம் மற்றும் சாய்வுகோணங்களிலேயே சொட்டுநீர், தெளிப்பு நீர்ப் பாசனமுறைகளை செயல்படுத்துங்கள்.

12. நடைபாதை மற்றும் வண்டிகள் செல்வதற்கான பகுதிகளில் தெளிப்புநீர் தெளிக்கப்பட்டு வீணாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

13. உங்களின் வால்வுகள், ஹோஸ் போன்றவற்றில் தனியங்கி ஆன்/ஆப் முறையை அமைப்பதன் மூலம் நாம் கவனிக்காதபோது நீர் வீணாவது தடுக்கப்படும்.

14. குழந்தைகளின் தண்ணீர் பொம்மைகளை புல்தரையின் காய்ந்த பகுதிகளில் போட்டு விளையாட விடுங்கள்.

15. மோட்டார் ஆயில், பெயிண்ட் போன்றவற்றை முறையாக மறுசுழற்சி பகுதிக்கு அப்புறப்படுத்துங்கள்.அவற்றை அப்படியே தரையில் கொட்டுவதன் மூலம் நீர் ஆதாரப் பகுதிகளை மாசுபடுத்துகிறோம்.

16. செடிகளின் இலைகளின் மேல் நீர் ஊற்றாமல் வேரிலிருந்து சற்று தள்ளி ஊற்றுங்கள்.

17. காரைக் கழுவும் போது ஹோஸ் பைப் பயன்படுத்தாமல் ஒரு பக்கெட்டில் நீர் எடுத்து ஸ்பாஞ்சால் துடையுங்கள்.

18. நீர் குறைவாக ஆவியாகும் காலை நேரத்தில் செடிகளுக்கு நீர் பாய்ச்சுங்கள்.

19. சிறிய புற்தரைகளுக்குக் கைகளால் நீரை அள்ளித் தெளியுங்கள்.

நீர் சேமிக்கும் வழிகள்:

1. ஒரு பெரிய பேரல் அல்லது சிறியளவுள்ள குளம் அமைத்து அதன் மேல் சிறு சிறு ஓட்டையுள்ள துணியை விரித்துவிடுங்கள். உங்கள் வீட்டின் மழைநீர் விழும் இடத்தில் இவ்வாறு அமைப்பதால் குப்பைகள் மேலேயே தங்கி நீரை மட்டும் கீழே அனுப்பும். உங்களுக்குப் பயன்பாடாத துணிக்கு இப்படியோர் உபயோகம் இருப்பதுடன் பாலிதீன் கவர் பயன்படுத்தப்படுவதும் குறையும். இவ்வாறு சேமிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்ட நீரை வண்டிகள் கழுவ, செடிகளுக்கு என பயன்படுத்தலாம்.

2. மேலும் அம்மழை நீரை புதியதாக வாங்கிய மரச்சாமான்களை கழுவப் பயன்படுத்தலாம். மழைநீரில் குளோரின் இல்லாததால் செடியின் வளர்ச்சியைத் தூண்டும். மறக்காமல் மழைநீர்த் தொட்டி அல்லது குளத்தை மூடி வைப்பதன் மூலம் கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்கலாம்.

3.மழைநீர் சேகரிப்பு மற்றும் குறைவான நீர் பயன்பாட்டு முறைகளை உங்களால் முடிந்தளவு நண்பர்கள், உறவினர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

4.உங்கள் அருகிலுள்ள பள்ளி, கல்லூரிகளின் மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

5. அருகிலுள்ள நர்சரியில் குறைவான நீர் தேவைப்படும் செடிகளைப் பற்றிக் கேட்டு அவற்றை வளருங்கள். அலங்காரச் செடிகளைவிட துளசி போன்ற மூலிகைச் செடிகளை வளர்ப்பதால் அதிகளவு ஆக்ஸிஜன் வெளியிடப்பட்டு சுற்றுசுழல் பாதுகாக்கப்படும். உங்களின் பத்தடி பால்கனியில் கூட துளசியை வளர்க்க முடியும்.

6. உங்களின் நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களிடம் பணியின் போது முடிந்தளவு நீர் மற்றும் மின்னாற்றலை சேமிக்கும் வழிமுறைகளை கூறிப் பயன்பெறுங்கள்.

7. உங்கள் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தப் பாருங்கள்.

8. விடுமுறையில் உங்கள் அருகிலுள்ள குளம் மற்றும் ஏரிகளை தன்னார்வலர்கள் மூலம் தூர் வாரி ஆழப்படுத்துங்கள். வெட்டுக் குத்து, பழியுணர்ச்சி எனக் காட்டும் குறுந்தொடர்கள், சினிமா போன்றவற்றுக்குச் செலவழிக்கும் நேரத்தில் ஒரு மரக் கன்றை உங்கள் அருகிலுள்ள சாலையில் வைத்து வளருங்கள்.

9. வீட்டிற்கு ஒரு மரம் என்னும் வேதாந்தம் முடிந்து போய் இப்போதுள்ள நிலையில் கிடைக்கின்ற இடங்களில் எல்லாம் குறைவான நீர் எடுத்துக் கொள்ளும் துளசி, வேம்பு, குமிழ் போன்றவற்றை வளர்த்து, மழைநீர் ஆதாரத்தைப் பெருக்குங்கள்.

10. ஹோட்டலில் தங்கியிருக்கும் போது, 24 மணி நேர தண்ணீர் வசதி என்பதற்காய் இஷ்டத்திற்கு பயன்படுத்துவதைத் தவிருங்கள்.

11. தினமும் ஒரு சில துளிகளாவது தண்ணீரை சேமியுங்கள். சிறுதுளியே பெரும் வெள்ளமாகும் விரைவில்.

நீர் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் முறைகள்:

உங்களின் சிறுசெயலும் சுற்றுப்புறத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். பாலிதீன் கவர்களால் ஏற்படும் தீமையை சென்னையின் மழைக்காலம் உங்களுக்கு உணர்த்தியிருக்கும். நீர் வடிகால் பகுதிகளில் சேரும் குப்பைகளில் பெரும்பகுதி பாலிதீன் கவர்களே. கடையில் இலவசமாய்த் தருகிறார்கள் என்பதற்காக அவற்றை வாங்கிக் குவித்து மாசு ஏற்படுத்தாதீர்கள். தோளில் மாட்டும் பையை எடுத்துச் சென்றால் அனைத்தையும் ஒரே பையில் கொண்டு வந்துவிடலாம். பருப்பு போன்றவற்றை வாங்கும் போது அவை அடைக்கப்பட்ட கவரைத் திருப்பி அதில் காய்கறிகளை வைத்து குளிர்சாதனப் பெட்டியில் பயன்படுத்தலாம். நீங்கள் ஏதேனும் கடை வைத்திருப்பவராய் இருந்தால் வாடிக்கையாளருக்குத் திரும்ப பயன்படுத்தும்படியான பைகளை ஒரு சிறுவிலை வைத்து பாலிதீன் கவர்களுக்குப் பதில் தரலாம்.

1. சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத பாஸ்பேட் இல்லாத துவைக்கும் சோப்புகள், டாய்லெட் கிளீனரை அதுவும் தேவையான அளவில் மட்டுமே பயன்படுத்துங்கள். சோடா உப்பு, எலுமிச்சை, வினிகர் போன்ற இயற்கையான பொருட்களை சுத்தம் செய்ய பயன்படுத்துங்கள்.

2. சமையலுக்குப் பயன்படுத்திய எண்ணெய், மீதமான கொழுப்புள்ள உணவுப் பொருட்கள் போன்றவற்றை சிங்கில் போட்டு தண்ணீரை மாசுபடுத்தாமல் குப்பையில் போடுங்கள்.

3. விஷமுள்ள பொருட்களை சிங்க் மற்றும் நீர் வடிகால் பகுதிகளில் கொட்டாதீர்கள்.

4. ஒரு லிட்டர் கார் ஆயில் 9,500 லிட்டர் நீரை மாசுபடுத்துவதுடன் நீர் மறுசுழற்சி மெஷினையும் பழுதடையச் செய்யும். Hazard waste center-ல் உங்களுக்குத் தேவைப்படாத பெயிண்ட், கார் ஆயில் போன்றவற்றைக் கொடுங்கள்.

5. உங்களுக்குப் பயன்படாத மாத்திரை, டானிக் போன்றவற்றை மருந்துகடைகளில் திரும்பக் கொடுங்கள்.

அதிகப்படியான நீர் பாய்ச்சுதல்:

உங்களின் நிலத்தடி மண் எப்போதும் சிறிதளவு ஈரமாகவும், இலைகள் எளிதாக உடையக் கூடியவகையில் இருந்தாலும் அதிகளவு பூஞ்சை காளான்கள் வளர்ந்தாலும் அதிகப்படியான நீரை நீங்கள் செடிகளுக்குத் தருவதாக அர்த்தம். மேற்சொன்னவற்றைக் கவனித்து சரியான அளவில் நீரை பயன்படுத்துங்கள்.

நீரை சேமிக்கும் தொழில்நுட்ப முறைகள்:

மழைநீர் சேமிப்பு:

மிக எளிதான இந்த முறையில் சேமிக்கப்பட்ட நீரை வீட்டு மற்றும் விவசாய பணிகளுக்குப் பயன்படுத்தலாம். இதில் மழைநீரை ஒரிடத்தில் பிடித்தல், அதை தேவையான இடத்திற்குக் கொண்டு செல்லுதல், சேமித்தல் என்னும் மூன்று படிகள் உள்ளன.

நிலத்தடி நீரைத் தேடி நாம் பூமியின் அடுத்த பக்கத்திற்கே துளை போட முயலும் துரதிஷ்டத்தை மழைநீரால் மாற்றமுடியும். நகரமயமாக்கலினால் நீர் பிடிப்பு பகுதிகள் குறைந்து கொண்டே வருவதும் தண்ணீரின் தேவையை அதிகரிக்கச் செய்கிறது. CGWB என்னும் நிறுவனத்தால் ஆயிரக்கணக்கான மழைநீர் சேகரிப்பு நிலையங்கள் இந்தியா முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரையை படிக்கும் ஒரு சிலராவது குறைந்து வரும் நிலத்தடி நீரை அதிகரிக்க மழைநீர் சேகரிப்பு முறையைப் பின்பற்றி நீரின் அளவை அதிகரிப்பீர்கள் என எண்ணுகிறேன்.

மழைநீரை எதிர்காலத் தேவைக்கு சேமித்து வைப்பதன் மூலமும், நிலத்தடி நீரின் அளவை உயர்த்துவதன் மூலமும் நீருக்காய் நீங்கள் செலவழிக்கும் தொகையை மிச்சப்படுத்தலாம். இதன் மூலம்

1. குறைந்த விலையில் ஆரோக்கியமான நீர் ஆதாரத்தைப் பெறலாம்.

2. இதிலுள்ள கிருமிகளை அழிக்க கொதிக்க வைத்தாலே போதும். மாசற்ற, கிருமிகளற்ற நீர் கிடைக்கும்.

3. எளிதாகத் தயார் செய்யக்கூடிய இவ்வகை நீர் ஆதாரம் உலகெங்கும் அமைக்க முடியும்.

4. இவ்வகை நீரில் எந்தவிதமான நிறமோ, சத்துக் குறைபாடுகளோ கிடையாது.

5. இவ்வகை நீரோட்டத்தால் நதிகள் மற்றும் ஆறுகளில் நீரோட்டம் அதிகரிக்கும்.

மழைநீர் சேமிப்பு முறைக்குத் தொட்டிகள், குளங்கள், பரிசோதனை அணைகள் போன்றவை பயன்படுகின்றன. அவற்றைப் பற்றிக் காண்போம்.

குழிகள்:

இயற்கையான அல்லது செயற்கையாக பள்ளமாகும் காலியிடங்களில் சிறு குழிகளை 1 to 2 மீ அகலம், 3 மீ ஆழமுள்ளதாக அமைத்து மழைநீரை சேமிக்கலாம். அவற்றில் பெரிய பாறை, சிறிய பாறைத் துண்டுகள், கற்கள் போன்றவற்றைப் போட்டு சேகரிக்கப்பட்ட நீர் மிக மெதுவாக நிலத்தில் இறங்கச் செய்யலாம்.

கால்வாய்கள்:

கால்வாய்கள் அமைக்கத் தகுதியான நீண்ட ஆழமான இடங்களில் 0.5 to 1 மீ அகலம், 1 to 1.5 மீ ஆழம் மற்றும் 10 to 20 மீ நீளத்தில், கிடைக்கும் மழைநீரைப் பொறுத்து இவை அமைக்கப்படுகின்றன. இவற்றுள் வடிகட்டிகள் பதித்து நீரை சுத்தப்படுத்தலாம்.

கிணறுகள்:

ஏற்கெனவே தோண்டப்பட்ட கிணறுகளில் வடிகட்டிகள் மூலம் தண்ணீரைச் செலுத்தி மழைநீர் சேகரிக்கப் பயன்படுத்தலாம். கிணற்றினைச் சுற்றி 100 முதல் 300 மிமீ உயரம் வரையிலான சிறிய தடுப்புகள் அமைத் மழைநீரைச் சேகரித்து உள் அனுப்பலாம். மோட்டார்அல்லது அடிபம்பு மூலம் வெளியேற்றப்படும் நீரை சிறிய சிமெண்ட் தொட்டிகளில் விழச் செய்து, பயன்பாட்டு இடங்களுக்கு எடுத்துச் செல்லும் வழியில் நீர்க் கசிவைத் தடுக்க, வரப்புகளின் ஒரங்களில் கற்களால், கரை அமையுங்கள்.

ஊர்ப் புறத்தில் உள்ள குளங்களை சரியான காலத்தில் தூர் வாரி படிக்கட்டுகள் அமைப்பதன் மூலம் குப்பைகள் குளத்தில் சேருவது கட்டுப்படுத்தப்படும். நம் பாட்டன், பூட்டன் காலத்தில் ஊர் தோறும் ஊருணி அமைத்து தண்ணீர்ப் பற்றாகுறையைப் போக்கினர். மேலே சொன்ன சேகரிப்பு முறைகளையே வசதிக்குத் தகுந்தாற் போல் மாற்றி அமைத்து பயன்படுத்தியுள்ளனர்.

எங்கள் ஊரிலேயே அப்படியொரு ஊருணி உண்டு. ஓடு அல்லது ஓலை வேயப்பட்ட வீடுகளின் முன்புறம் மழைநீர் விழுந்து ஆசாரம் (hall) என்னும் பகுதியில் வழிந்தோடி ஒரு மூலையில் அமைக்கப்பட்டுள்ள தாழ்வான பகுதிக்குச் செல்லும். அங்கேதான் பாத்திரம் துலக்குவது, துணி துவைப்பதெல்லாம். அங்கிருந்து குழாய் மூலம் வீட்டிலிருந்து வெளியேற்றப்படும் மழைநீர் கால்வாய் மூலம் ஊரின் கடைசி பகுதிக்கு வரும். அனைத்து வீடுகளிலும் சேகரிக்கப்படும் நீரால் சற்று பெரிய குழாய் அல்லது கால்வாய் மூலம் கல்லணைக்குச் செல்லும். கல்லணை என்பது பெரிய பாறைகள், கிணறு வெட்டும் போது கிடைக்கும் கற்களை பொதுவான இடத்தில் போட்டு அமைப்பது.

பின் படிக்கட்டுகள் அமைக்கப்பட்ட குளத்திற்குச் செல்லும் நீர் மீண்டும் இரு கல்லணைகளால் வடிகட்டப்பட்டு ஊருணிக்குப் போகும். கடைசி இரு கல்லணைகளிலும் கற்களின் அளவு சிறிது, மிகச் சிறிதாக குறைக்கப்பட்டிருக்கும். அவரவர் வீட்டிலும், வீட்டிற்கு வெளியேயும், கல்வாய் பகுதியிலும் சல்லடை என்னும் வடிகட்டி அமைக்கப்பட்டு குப்பைகள் வடிகட்டப்படுவதோடு கல்லணையிலும் மேலும் சுத்திகரிக்கப்படும். தொத்தாங்கொட்டை என்னும் கொட்டையை அடியில் தேய்த்த ஒரு பாத்திரத்தில் இப்படிச் சேகரிக்கப்பட்ட நீரை எடுத்து வந்தால், வீடு வருவதற்குள் சுத்தமான குடிநீர் ரெடி! ஊர் கூடித் தேர் இழுக்கும் கதையாக ஊருணியில் மழைநீர் விளையாட்டு போல சேகரிக்கப்படுகிறது.

உங்கள் வீட்டு பாட்டி, தாத்தாவிடமும் இது போன்ற கதைகள் இருக்கலாம். அவர்களிடம் கேட்டு உங்கள் வீட்டிலும் நீர் மேலாண்மையை அமல்படுத்தி வருங்கால சந்ததிக்கு வளம் சேருங்கள்.